செய்தி வெளியீடு எண்.431/2010 நாள்: 15.6.2010

<u>சிறப்பு மனுநீதி நாள் முகாம்</u>

16.6.2010 மூன்றாவது புதன்கிழமை அன்று வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் அரக்கோணம் வட்டம் கோடம்பாக்கம், உளியநல்லூர், மகேந்திரவாடி ஆகிய கிராமங்களுக்கான சிறப்பு மனுநீதிநாள் முகாம் <u>"மகேந்திரவாடி"</u> கிராமத்தில் மாவட்ட அளவில் அனைத்து அதிகாரிகள் பங்கேற்கும் மக்கள் குறை கேட்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேலும் 23.6.2010 நான்காவது புதன்கிழமை அன்று மாவட்ட வருவாய் அலுவலர், வேலூர் தலைமையில் வாணியம்பாடி வட்டம் இளையநகரம், மதனாஞ்சேரி ஆகிய கிராமங்களுக்கான சிறப்பு மனுநீதிநாள் முகாம் <u>"இளையநகரம்"</u> கிராமத்தில் நடைபெறும். பொதுமக்கள் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டு தங்கள் குறைகளை நேரில் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.